மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செண்பகராமன்புதூர் கிராமத்தில் கிட்டத்தட்ட 135 ஏக்கர் நிலப் பரப்பளவில் மொத்த மதிப்பீடு ரூ. 14.52 கோடி செலவில் அமைக்கப்படும் இத்திட்டத்திற்கு ரப்பர் வாரியத்தின்மூலமாக, அரசு மானியமாக 3.55 கோடி ரூபாய் மானியம் அளிக்க, இந்திய அரசின் தொழில் வணிகத் துறையும் ஒப்புக்கொண்டுள்ளது. இத்திட்டத்தை 2004 ஆம் ஆண்டு ஆகஸ்டு - செப்டம்பர் திங்களில் தொடங்கி, 2005 ஆம் ஆண்டு இறுதிக்குள் கண்டிப்பாக முடிப்பதற்கு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 93, திரு. மா. சின்னசாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

93—

தொழில் வளர்ச்சி

***7506–திரு. மா. சின்னசாமி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தை, இந்தியாவின் தொழில் வளர்ச்சியில் முன்னோடி மாநிலமாக ஆக்க, தொழில் தொடர்புடைய அனைத்துச் சாராருடனும் தொழில் வளர்ச்சி குறித்துக் கலந்தாலோசிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தை, இந்தியாவின் தொழில் துறை வளர்ச்சியில், முன்னோடி மாநிலமாக ஆக்க இந்த அரசு தொழில் தொடர்புடைய அனைத்துச் சாராருடனும் தொழில் வளர்ச்சி குறித்து அவ்வப்போது ஆலோசித்து நல்ல முடிவுகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி இவ்வரசு இந்திய தொழில் கூட்டமைப்பு மற்றும் இந்திய வணிகம் மற்றும் தொழில் கழகங்களினுடைய கூட்டமைப்பு போன்ற அமைப்புகளுடன் கலந்தாலோசித்து முடிவெடுக்கிறது. மேலும், இந்தியத் தொழில் கூட்டமைப்புடன் இணைந்து செயல்பட அம்மாவினுடைய அரசு, தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு செயற்குழுவை அமைத்துச் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2004 ஜூலை 30]

திரு. மா. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித ஆட்சியில், தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முதன்மையான மாநிலமாக ஆக்கிக் காட்டுவதற்கு அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கிற அன்னையின் அரசு இது. இன்றைக்குப் படிப்பை முடித்துவிட்டு, வேலையில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் மாணவ, மாணவியருக்கு வேறு ஏதாவது புதிய தொழில் தொடங்கி, அதன்மூலம் மாணவ, மாணவியருக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான புதிய திட்டம் நமது அரசிடம் உள்ளதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு புதிய தொழில்களுக்கான முயற்சிகளை எடுத்து, புதிய தொழிலதிபர்களை அழைத்துத் தொழில்களைத் தொடங்குவதில் மீண்டும் ஒரு உத்வேகத்துடன் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தின் எந்தெந்தப் பகுதியில் எந்தெந்தப் பொருட்கள் விளைகின்றனவோ, அந்தந்தப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு தொழில்களை ஆரம்பித்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது போன்ற பல்வேறு முயற்சிகளை அரசு எடுத்து வருகிறது. அது மட்டுமல்ல, புதிய தொழில்களுக்குப் புதிய உத்வேகம் அளிப்பதற்கென்றே தொழில் வழிகாட்டுதல்மூலம் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் போன்றவற்றை அமைத்து அரசு செயல்பட்டு வருகிறது. இன்னும் தொழில் வழிகாட்டுதல்மூலம் — பல தொழிலதிபர்களை நமது நாட்டிற்கு அழைத்துப் பேசும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நிறையப் பேர் வரவிருக்கின்றார்கள். அதனுடைய அடிப்படையில் எந்தெந்தப் பகுதியில் எந்தெந்தத் தொழில்களை ஆரம்பிக்கலாம் என்பதைக் கருத்திற்கொண்டு நிச்சயமாகப் புதிய தொழில்கள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்து முடித்து, சுயமாக புதியதாகத் தொழில் துவங்க இருக்கின்ற இளைஞர்களுக்கு வழிகாட்டுகின்றவிதமாக, புதிய துறைகளில் என்னென்ன தொழில்களைச் செய்யலாம்; அதற்குரிய இயந்திரங்களை எவ்வாறு பெறுவது; அந்தத் தொழிற்சாலைகளை எவ்வாறு நிறுவுவது; அதற்கு எப்படிக் கடன் வசதி பெறுவது என்பதுபோன்ற பல்வேறு

ஆலோசனைகளைப் பெறுகின்றவிதமாக இளைஞர்களுக்கு வழிகாட்டுகின்றமுகமாக, தொழில் வளர்ச்சி மன்றம் கருத்தரங்கங்களை மாவட்ட அளவிலே நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய தொழில்கள் தொடங்குவதற்கு ஏற்கெனவே நமது மதிப்பிற்குரிய, மாண்புமிகு அமைச்சர் திரு. பாண்டுரங்கன் அவர்கள், மாவட்டந்தோறும் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்தார்கள். அந்த ஏற்பாட்டின் விளைவாக, பல்வேறு தொழில்களுக்கு, சிறுதொழில் முதலீட்டுக் கழகத்தின்மூலமாகத் தொழில் தொடங்கப்பட, ஏற்கெனவே பல்வேறு கடன்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. மீண்டும் மாவட்டந்தோறும் இதுபோன்ற முயற்சிகளைக் கண்டிப்பாக மேற்கொள்வோம் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 94, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

94—

சுங்க வரி

***17741—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரில் இயந்திரங்களைப் பயன்படுத்தி மிகப் பெரிய அளவில் தங்க நகைகளை உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலைகளுக்குச் சுங்க வரி விதிக்க, மைய அரசுக்குப் பரிந்துரைக்க, மாநில அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்க நகைகள் உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலைகளுக்கு சுங்க வரிகள் விதித்தல் தொடர்பாக மைய அரசுக்குப் பரிந்துரைக்க தற்சமயம் வாய்ப்பில்லை என்பதைக் கனிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.